# பத்திரிக்கை செய்தி

## நில மதிப்பீடு சான்று வழங்க லஞ்சம் வாங்கிய தாலுகா அலுவலக உதவியாளருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ. 4000/-அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தாலுகா, உடையார்கோவில் வடபாதி கிராமத்தில் வசித்துவரும் புகார்தாரர் திரு. D.ராஜவேலு, என்பவர் 2013ம் ஆண்டில், தனது விவசாய நிலத்தில் PVC பைப் போடுவதற்காக AXIS BANKல் ரூ.4,00,000/- லோன் கேட்டபோது, மேற்படி AXIS BANKல் நில மதிப்பு சான்று கேட்டதன்பேரில், ராஜவேலு பாபநாசம் தாலுகா அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளார். அவர் கேட்ட நில மதிப்புச் சான்றினை பெற்றுத்தருவதாகக்கூறி, பாபநாசம் தாலுகா அலுவலகத்தில் பணிபுரிந்துவந்த A5 Assistant கல்யாணசுந்தரம், காப்பான் தெரு, பாபநாசம் என்பவர், ராஜவேலுவிடம் ரூ.5000/- லஞ்சம் கேட்டுள்ளார். அரசு பணியை செய்ய லஞ்சம் கேட்ட கல்யாணசுந்தரத்திற்கு, லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத ராஜவேலு 03.12.2013 அன்று லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் கொடுத்ததன் பேரில், லஞ்ச ஒழிப்பு பிரிவில் கல்யாணசுந்தரத்தின் மீது குற்ற எண்.13/2013 ன்படி ஊழல் தடுப்புச் சட்டத்தில் வழக்கு பதிவு செய்து, அதன்படி அரசு சாட்சிகளின் முன்னிலையில் ராஜவேலுவிடம் ரூ.5000/- லஞ்சம் பெற்ற போது கல்யாணசுந்தரத்தை கைது செய்து நீதிமன்ற காவலில் அடைத்தனர். மேற்படி கல்யாணசுந்தரத்தின் மீது ஊழல் தடுப்பு சட்டம் சட்டப் பிரிவுகள் 7, 13(2) r/w 13(1)(d) ன் படி குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கு தொடர்ந்து நடந்துவந்தது. இன்று 20.02.2023 இவ்வழக்கில் மாண்புமிகு நீதிபதி அவர்கள் குற்றவாளி கல்யாணசுந்தரத்திற்கு ஒவ்வொரு சட்டப் பிரிவுகளுக்கும் தலா 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்தும், சிறை தண்டனையை ஏக காலத்தில் அனுபவித்தும், மேலும் தலா ரூ. 4000/-அபராதம் விதித்தும், அபராதம் கட்டத்தவறினால், மேலும் 3 மாதம் சிறை தண்டனை விதித்தும் உத்தரவிட்டார்.

## PRESS NOTE

**Taluk Office Assistant convicted for 2 years imprisonment and fine Rs.4,000/- for demand and obtainment of bribe for issuing Land Guideline Value Certificate**

In the year 2013, the complainant Tr.Rajavelu, residing at Vadapathi Village, Udaiyar Kovil Taluk, Thanjavur District, approached the Axis Bank for obtaining loan for laying PVC pipes at his land for agriculture. The bank officials had asked the petitioner to give the guideline value certificate. In this connection the complainant applied for getting guideline value certificate at Papanasam Taluk Office, Thanjavur District. Tr.Kalyanasundaram, A5 Assistant Papanasam Taluk Office, Thanjavur District demanded Rs.5,000/- as bribe for processing his application. Not willing to give bribe, the complainant approached the Vigilance and Anti – Corruption, Thanjavur Detachment and gave complainant. In this connection a case was registered and the accused Tr.Kalayanasundaram was trapped on 03.12.2013. After completion of investigation, charge sheet was filed before the court. The case was under trial at the special court, Thanjavur. Today 20.02.2023 the special court pronounced the judgment as convicted, each two years rigorous imprisonment for bribe demand and obtainment and Rs.4,000/- fine, and another three months imprisonment if failing to pay the penalty.